**செய்தி வெளியீடு எண்: 270** **நாள்: 18.04.2018**

# செய்தி வெளியீடு

## அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பெர்ஜர் பெயிண்ட்ஸ் - ஐ - டிரெயின் பயிற்சி மைய திறப்பு விழா

அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் **பெர்ஜர் பெயிண்ட்ஸ் i-Train** நிறுவனத்தின் சார்பாக நிறுவப்பட்ட **திறன் மேம்பாடு அடையும் பயிற்சி மையம்** வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை **ஆணையர் திருமதி B. ஜோதி நிர்மலாசாமி, இஆப.** அவர்களால் 18.4.2018 அன்று திறந்துவைக்கப்பட்டது. இந்த **திறன் மேம்பாடு பயிற்சி மையத்தில்** மாணவர்கள் / திறன் எய்தாதோர் / பொதுமக்கள் ஆகியோர் முன்னோடி பயிற்சி பெறக் கூடிய வகையில் உபகரணங்கள் Paint Booth மற்றும் Paint Simulator ஆகியவை சுமார் 80 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன. நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு **பெயிண்டிங்** சம்பந்தமான அனைத்து பயிற்சிகளும் இம்மையத்தில் அளிக்கப்படுகிறது. இதில் ஐடிஐ மாணவர்கள் மற்றும் தொழிற் திறன் கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள அனைவரும் சேர்ந்து பயனுறும்வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது. **காட்சி வழி பெயிண்டிங்** பயிற்சி இதில் சிறப்பு அம்சமாகும்.

இந்த திறப்பு விழா நிகழ்ச்சியில் **திரு வினோத் தாஸ்,** முதன்மை மேலாளர், பெர்ஜர் பெயிண்ட்ஸ், **திரு சஞ்சய் சௌத்ரி,** தலைமை வர்த்தக பாதுகாவலர் ஆகியோருடன் அரசுத்துறை அலுவலர்களான வேலை வாய்ப்பு பயிற்சித்துறையின் இணை இயக்குநர் ( கைவினைஞர் பயிற்சி ) **திரு தி. இராஜசேகர்,** இணை இயக்குநர் (தொழிற்பழகுநர் பயிற்சி ) **திரு க. கதிர்வேலு,** மற்றும் மண்டல பயிற்சி இணை இயக்குநர் **திரு ஆர். மகேஸ்வரன்** ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**